ராணி
காமிக்ஸ்
லேடி ஜேம்ஸ்பாண்டு
மாடஸ்தி தோன்றும்
குணாகரூர்
கடத்தல்காரர்கள்
ரூ.3

குறள் படிப்போம்! குழந்தைகளே!!

வந்தது ஆண்டு 2000!
தந்தது மாதம் 22,000!
எந்த அரசும் குறளுக்குதான்
இப்படிப் பரிசு தந்ததில்லை!

குறுகத் தரித்த திருக்குறளின்
"குறளோவியம்"தான் தந்தவர்தான்!
சிறுவர் சிறுமியர் குறள்படித்த
தேர்ச்சியைக் கண்டார்! ஆணையிட்டார்!

"வள்ளுவர் சிலை"தான் கடல்நடுவில்
வானம் அளாவ நிறுவியவர்!
துள்ளியே ஆடும்! சிறுவரெல்லாம்
தோய்ந்த திருக்குறள் நயம் உணர்ந்தார்!

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"
ஒரு குறள் அதுபோல் நிதி உதவி
அள்ளியே தந்தார்! மனம்நிறைந்தார்!
அவர்களைப் பெற்றோர் மிகமகிழ்ந்தார்!

இருபத்திமூன்று பேர்களுக்கும்
இருபத்திமூன்று ஆயிரமே
நிறுவினார்! மேலும் பலர் படித்தால்
நிதியும் உயரும்! என உரைத்தார்!

"அய்யன்" திருக்குறள்! அன்பளிப்பு!
ஆயிரம் ரூபாய் பரிசளிப்பு!
பெய்யெனப் பெய்யும் மழை போலப்
பிள்ளைகள் அடைவர்! மாதமாதம்!

செயற்கரிய செய்வார்! பெரியார்! எனத்
திருக்குறள் கூறுதல் இதுதானோ?
வியத்தகு சாதனை! சிலைதிறப்பு
விழா தந்த திருக்"குறள் நிதி"தானோ?

—புலவர் நெல்லை ஆ. கணபதி.

ராணி காமிக்ஸ் – 375
(மாதம் இருமுறை இதழ்)
பிப்ரவரி 1 – 15
2000

குணா கரூர் தோன்றும்

கடத்தல்காரர்கள்

எனக்காக காரை நிறுத்தியதற்கு நன்றி சார்!
யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?
மிகவும் பதட்டத்து டன் இருக்கிறாயே? என்ன நடந்தது?
அதை ஏன் கேட் கிறீர்கள்
யாரோ ஒருவன் என் காரை நிறுத்தி னான். இன்னொருவன் என் மீது பாய்ந்து என்பணத்தையும் காரையும் எடுத்துச் சென்றுவிட்டான்!
அதுதான் இந்த காயமா?
ஒருவனாக இருந் தால் சமாளித்திருப் பேன்!
காரில் ஏறுங்கள் 30 மைல் தொலைவில் ஓட்டல் இருக்கிறது!
ரொம்ப நன்றி சார்! என் பெயர் மரியம்!
அப்படியா? என் பெயர் வில்லி கார்வின்!

இருவரும் ஓட்டலுக்கு வந்தார்கள்.
மரியம்! சோர்வாக இருக்கிறீர்கள். நான் சாப்பிட ஏதாவது கொண்டுவரச் சொல்கிறேன்!
வில்லி! எனக்காக ரொம்ப சிரமப்படுகிறீர்கள். ரொம்ப நன்றி!
நான் 10—ம் நம்பர் அறையில் இருக்கிறேன் காலையில் பார்ப்போம்! நன்றாக ஓய்வெடுங்கள்
வில்லி! தயவுசெய்து என்னை தனியாக விட்டுச்செல்லாதீர்கள்!
ஏன் இங்கேயும் ஆபத்து தொடரும் என்று பயமா?
இல்லை! ஆனால் தனியாக இருக்க பயம்!
நீங்கள் என்னுடன் இருநதால் கொஞ்சம் தெளிவாக இருப்பேன்!
ரொம்பவும் பயப்படுகிறாள்!
ஓ.கே. அப்படியானால் இருவரும் சீட்டு ஆடலாம்! ரம்மி ஆடத் தெரியுமல்லவா?

சூடாக காபி சாப்பிட்டுக் கொண்டே விளையாடினால் இதமாக இருக்கும்!
நள்ளிரவ ஆகிவிட்டதால் ஆர்டர் செய்தாலும் தாமத மாகத்தான் எடுத்து வரு வார்கள்! நான் போய் எடுத்துவரட்டுமா?
வேண்டாம்! ஏற்கனவே ரொம்ப சிரமம் கொடுத்து விட் டேன்!
வில்லி! நீங்கள் மனதை ரொம்ப கட்டுப்பாட்டு டன் வைத்திருக் கிறீர்கள்?
ஆமாம்! நான் கொஞ்சம் கூச்ச சுபாவமுள்ளவன்! ஏதோ ஆபத்து நம்மை நெருங்கு கிறது!
ஆபத்தா....? நம்மையா? என்ன சொல்கிறீர்கள்?
ஆமாம்! என் காது துடிக் கிறதே!
அய்யோ...! துப்பாக்கி ஏதும் வைத்திருக்கி றீர்களா?
இல்லை! எத்தனை பேர் வந்தாலும் நான் சமாளித்து விடு வேன்
திடீரென்று அறைக் கதவை திறந்துகொண்டு திமுதிமுவென்று சிலர் கையில் ஆயுதங்களுடன் ஓடிவந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் வில்லி சுதாரித்தார்.
ஏய்... நீ பின்னே செல்!
உடனே வில்லி அவர்களை நோக்கி நாற்காலியைத் தூக்கி வீசினார்.
வில்லி மரியத்துடன் பேச்சு கொடுத்துக் கொண்டே அவர்களைத் தாக்கினார்.
வில்லி ஒருவனுடைய கையைப் பிடித்து திருகினார்.
இங்கே எதற்கடா வந்தீர்கள்?
வில்லி அவனை அப்படியே தூக்கி நச்சென்று கீழே போட்டார்.
இந்தா வாங்கிக் கொள்!

வந்தவர்களை வில்லி மயக்க மடையச் செய்தார்.
வில்லி! என்ன ஆயிற்று?
இவர்கள் எல்லாம் சொங்கிகள்!
மரியம்! இவர்களை உனக்கு முன்பின் தெரியாதா?
இல்லை வில்லி! இவர்கள் யார் என்றே தெரியவில்லையே?
அடேயப்பா! இவர்களை தூக்கி பந்தாடிவிட்டீர்களே!
ஏதோ புத்தகத்தில் படித்திருக்கிறேன்!
அவர்கள் கத்தியெல்லாம் வைத்திருந்தார்களே!
அவ்வளவு தைரியம் எப்படி வந்தது என்றே தெரியவில்லையே!
இவர்கள் எதற்காக இங்கே வர வேண்டும்?
முதலில் ரோட்டில் உன்னிடம் கொள்ளையடித்திருக்கிறார்கள்! அடுத்து ஓட்டலில்...! இரண்டுக்கும் தொடர்பு இருக்குமோ?

முதலில் அருகில் உள்ள போலீஸ் நிலையத்துக்கு போன் செய்து ரோட்டில் உன்னிடம் கொள்ளையடித்ததை சொல்ல வேண்டும்!
வேண்டாம் வில்லி! இவர்களை கட்டிப் போட்டாலே போதும்!
மரியம்! எனக்கு இது சரியாகப் படவில்லை!
வில்லி அவர்களை கட்டிப் போட்டார்.
மரியம்! நான் இவர்களை கட்டிப் போட்டு விட்டு போலீசுக்கு தகவல் கொடுக்கிறேன்!
நீ பயப்படாதே! இவர்களை அவர்களிடம் ஒப்படைத்தால் தான் இவர்கள் எதற்காக உன்னைத் தேடி வருகிறார்கள் என்ற உண்மை தெரியும்!
அதற்குள் மரியம் இரும்புத் தடியை எடுத்தாள் பின்னே இருந்து வில்லியைத் தாக்கினாள்.
படார்!
வில்லி அப்படியே மயங்கிச் சரிந்தார்

உடனே மரியம் அங்கே மயங்கிக் கிடந்தவர்களை எழுப்பினாள்.
டன்கன்! எழுந்திரு!
ஆ...! வில்லியை எங்கே?
அதோ கிடக்கிறான்! அவனால் நமக்கு இனி எந்தத் தொந்தரவும் இருக்காது!
ம்... எழுந்திருங்கள்! இன்னும் சிறிது நேரத்தில் நமது வேலையை தொடங்க வேண்டும்!
நம் திட்டப்படியே விரைவில் வில்லியை அப்புறப்படுத்தவேண்டும்!
டன்கன் நீ காரை ஓட்டு! இவனை இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் மலை வீட்டுக்கு கொண்டு செல்லவேண்டும்!
மரியம் மடமடவென கட்டளைகள் பிறப்பிததாள்

மலை வீட்டில்—
வெரிகுட் மரியம்!
வில்லியை மடக்குவதற்கு ரொம்ப சிரமப்பட்டு விட்டேன்!
அலெக்ஸ்! என் வேலையை கச்சிதமாக முடித்துவிட்டேன்! இனி உங்கள் கையில்தான் இருக்கிறது!
எந்தப் பிரச்சினையும் வராது!
அடுத்து ஆப்ரேஷன்தான்! நாளை வேலையைத் தொடங்கிவிடலாம் ஒரு வாரத்துக்குள் எல்லாம் முடிந்து மாடஸ்திக்கு செக் வைக்கலாம்!
நியூயார்க்கில் ஒரு ஓட்டலில் மாடஸ்தி, ஜெரால்டு, பிராங்க் மூவரும் அமர்ந்திருந்தார்கள்.
நான் எங்கள் அலுவல் விசயமாக இங்கே வந்தேன்.
பிராங்க்தான் உன்னையும் சாப்பிட அழைக்கலாம் என்றார். அதான் அழைத்தேன்.
ரொம்ப நன்றி!
மாடஸ்தி! வில்லியை எங்கே? அவரும் நம்முடன் விருந்தில் கலந்துகொண்டிருக்கலாமே!

அங்கே மலை வீட்டில் வில்லி ரொம்பவும் மிரண்டுபோய் இருந்தாா.
வில்லி! அவருடைய நண்பர் ஜானை பார்க்க போயிருந்தார். விரைவில் வந்துவிடுவார்! இன்றைக்கு வரணும்!
இதுவரை அவரிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை!
கொஞ்சம் பொறு! அதோ அலெக்ஸ்! ரஷ்யாவில் என்னுடன் வேலை பார்த்தவர்!
குட்ஈவினிங் ஜெரால்டு... உங்களுடைய விருந்தில் நந்திமாதிரி நான் வந்து விட்டேனோ?
அலோ அலெக்ஸ்! நீ பெரிய ஆளாகிவிட்டாய்... எங்களை மறக்காமல் நினைவு வைத்திருக்கிறாயே...?
என்னை வேலையில் இருந்து நீக்கினாலும் நான் உங்களை மறக்க மாட்டேன்!

அலெக்ஸ்! உனக்கு மாடஸ்தியை தெரியுமல்லவா?
பெண் புலி ஆயிற்றே! நமக்கு அவர் இரகசிய உதவிகள் செய்திருக்கிறாரே!
இனியும் உங்களுக்கு இடைஞ்சலாக இருந்தால் நல்லதல்ல... வரட்டுமா?
அலெக்ஸ்! உன்னைப் பார்த்து ரொம்ப காலமாகி விட்டது!
அலெக்ஸ் சென்றுவிட்டான்.
அலெக்ஸ்! இப்போது எப்படி?
சில தீவிரவாத செயல்களில் ஈடு படுவதாக எங்களுக்கு செய்தி வந்திருக்கிறது!
அப்படியானால் அவரைப்பற்றி துப்பு துலக்கவே இல்லை!
அன்று இரவு மாடஸ்தி ஹோட்டல் அறையில்இருந்தாள். யாரோ அறைக் கதவை தட்டினார்கள்.
யாரது?
குட் ஈவினிங் மேடம்! என் பெயர் மரியம்! உங்கள் நண்பர் வில்லியைப் பற்றி அவசரச்செய்தி கொண்டுவந்திருக்கிறேன்!

வில்லி உன்னை அனுப்பியிருக்கிறாரா? எங்கே அவர்?
அவர் எங்கே என்னை அனுப்பினார்? அவர் நரகத்தில் அல்லவா இருக்கிறார்!
வில்லி நரகத்தில் இருக்கிறாரா? நீ என்ன சொல்கிறாய்?
அமைதியாக இருங்கள்! நான் ஒரு படம் போடுகிறேன். அதைப் பார்த்தால் புரிந்துகொள்வீர்கள்!
படத்தைப் பார்த்தால் நான் பிளாக்மெயில் பண்ணுவதைப் போலத் தெரியும்!
மரியம் படம் போடுவதறகான ஏற்பாடுகளை செய்தாள்.
படத்தை பாருங்கள்.
திரை இங்கு மாட்டினால்தான் கச்சிதமாக இருக்கும்!
புராஜெக்டர் இங்கிருந்தால்தான் படம் தெளிவாகத் தெரியும்!

வில்லியை காட்டி இவள் எதற்கு என்னை பிளாக்மெயில் செய்யப் பார்க்கிறாள்!
நான் வெளிநாட்டில் உள்ள மிகப்பெரிய கூட்டத்துக்காக வேலை செய்கிறேன். அவர்கள் இட்ட கட்டளைப்படி இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகளுக்காக நான் செயல்படுகிறேன்!
எங்களுடைய திட்டத்துக்கு அந்த இரண்டு விஞ்ஞானிகளின் ஒத்துழைப்பு தேவை!
உங்களுடைய திட்டம் என்ன!
நான் சொல்கிறது புரிகிறதல்லவா?
அந்த விஞ்ஞானிகளுடைய போட்டோ, பேப்பர்ஸ், டைரி மற்றும் கேசட்டுகள் எங்களுக்கு எதிராக இருக்கிறது!
அதை எப்.பி.ஐ.யிலோ அல்லது சி.ஐ.ஏ.விலோ எங்களுக்கு சாதகமாக நீ மாற்றிக் காட்ட வேண்டும்!
நான் அதை செய்ய மறுத்தால்...!

சொன்னால் புரியாது. முதலில் படத்தைப் பார்!
படம் இயக்கப்பட்டது. வில்லி ஒரு அறையில் மிரட்சியுடன் அடைபட்டிருக்கும் காட்சி வந்தது.
அவருக்கு ஒரே ஒரு ஊசிதான் போட்டோம்! எப்படி ஆகிவிட்டார் பார்த்தாயா?
அந்த ஊசி மருந்து பழைய நினைவுகளை மறக்கடித்து பயந்த மிரண்ட சுபாவத்துக்கு கொண்டுவந்துவிடும்!
பார்ப்பது எல்லாம் விகாரமாகத் தெரியும்! தன் நினைவை இழந்து யாரைப் பார்த்தாலும் பயந்து நடுங்கத் தோன்றும்!
அவருடைய மிரட்சியான குரலைக் கேட்டால் யாருக்கும் இரக்கம் வந்துவிடும்! இதெல்லாம் பொய் அல்ல! உண்மை!

இதோ இது ஐந்தாவது நாள் சோதனை! நான் சாதாரணமாக அந்த அறைக்குச் செல்கிறேன் பார்!
நான் வில்லியின் அறைக்குள் நுழைகிறேன். வில்லி என்னைப் பார்த்து எப்படி பயந்து நடுங்கி சுவரோடு சுவராக பதுங்குகிறான் பார்!
எப்பேர்பட்ட வீரனைக்கூட இந்த மருந்து கோழையாக்கி விடும்!
அய்யோ... வில்லி உனக்கா இந்தக் கதி?
படம் முடிந்தது
ஒரு வாரத்திலேயே வில்லி எப்படி மாறிப்போனார் என்று பார்த்துவிட்டாய் அல்லவா?
நான் சொல்கிறபடி கேட்கவில்லை என்றால் அடுத்த வாரம் வில்லி நிலைமை மோசமாகி விடும்!
புரிகிறது!
இப்போதைக்கு உன் முடிவுக்குப் பிறகுதான் மருத்து வத்தை தொடர்வதா. விடுவிப்பதா என முடிவு செய்வோம்!
என்ன செய்யலாம்?

இதையெல்லாம் பார்த்தால் என்னை உதைக்க வேண்டும் போல் இருக்குமே?
உன்னை உதைத்தால் மட்டும போதாது!
ஆ...!
கும்...!
மாடஸ்தி ஓங்கி ஒரு குத்துவிட்டாள்! மரியம் பொத்தென்று படுக்கையில் விழுந்தாள்.
உடனே மாடஸ்தி போன் செய்தாள்.
சார் ஜெரால்டு! நீங்களும் பிராங்கும் உடனடியாக என் அறைக்கு வாருங்கள்!
மிகவும் அவசரம்!
பிராங்கிடம் சொல்லி ஒரு ஆம்புலென்ஸ் வண்டியும் கூட இருவரையும் வரச் சொல்லுங்கள்.
அத்துடன் ஒரு காரும் நல்ல டிரைவரும் தேவை.
பிராங் என்னுடன்தான் இருக்கிறார்! 20 நிமிடத்தில் அங்கே இருப்போம்!
அடுத்த இருபதாவது நிமிடத்தில்
மாடஸ்தி! நீ ஏதோ படபடப்பாக பேசியதாக ஜெரால்டு சொன்னாரே!
கட்டிலுக்கு வந்து பாருங்கள்!

இறந்துவிட்டாள்!
ஆமாம்! நான் வேணும் என்றே அவளைக் கொல்லவில்லை!
இவள் வெளி நாட்டு தீவிரவாதி! அவள் செய்த துரோகத்துக்காக தாக்கினேன் இப்படிச் சாவாள் என்று நினைக்கவில்லை!
மாடஸ்தி! இந்த வெளிநாட்டு தீவிரவாதியை உயிரோடு பிடித்திருக் கலாமே!
பிராங்! கொஞ்சம் சும்மா இருங்கள்!
மாடஸ்தி! நீ எதையும் யோசிச் காமல் செய்யமாட்டாய்! என்ன நடந்தது?
வுந்து இந்த படததைக் கொஞ்சம் பாருங்கள்!

பிராங்க்! உங்களிடம் இருக்கும் இரண்டு பெரிய விஞ்ஞானிகளுக்காக இது நடந்திருக்கிறது. அந்த விஞ்ஞானிகள் பற்றிய குறிப்புகளை தருவதற்கு என்னோட உதவி வேண்டுமாம்!
அதற்காக கடத்தல்காரர்கள் வில்லியை கடத்தி சித்ரவதை செய்கிறார்கள்!
அடக்கடவுளே!
படம் முடிந்ததும் எழுந்தார்கள்.
மாடஸ்தி! இவள் ரிப்போர்ட் கொடுக்கா விட்டால் அவர்கள் வில்லிக்கு மேலும் ஊசி போட்டுவிடக் கூடாதே!
பொழுதுஎன்ன செய்யலாம்?
தல்காரர்கள் டமிட்டுக் கொண்டிருப் -பார்கள்! அதனால் எச்சரிக்கையாக காயை நகர்த்த வேண்டும்!
எப்படி?
கடத்தியவர்கள் யார்? எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாமல் என்ன செய்ய முடியும்?
அப்படியில்லை! பிராங்க்!

வில்லி தன்னை படம் எடுப்பதை புரிந்துகொண்டு தான இருக்கும் இடத்தை சைகையிலே சொல்லி இருக்கிறார் !
எப்படி கண்டுபிடித்தாய்?
முதல்நாள் வில்லிக்கு லேசான மருந்து கொடுக்கப்பட்டதும் கடத்தல்காரர்களிடம் நடித்திருக்கிறார் ! நமக்குப் புரிய வேண்டும் என்பதற்காக கைவிரல் களாலேயே சிக்னல் கொடுத்திருக் கிறார்.
ஓரளவுக்கு அதை நான் கண்டுபிடித்து விட்டேன் !
வில்லி காட்டிய சைகைக்கு என்ன அர்த்தம்?
கிரேசி எம்.டி. போலி !
இது ஏதோ ஒரு இடத்தைக் குறிக்கிறது என நினைக்கிறேன். உங்கள் ஆட்களிடம் காட்டி கண்டு பிடிக்கச் சொல்லுங்கள் !
உடனடியாக என் ஆட்களிடம் கேட்டு டுகிறேன் !
கடத்தல்காரர்கள் இவளை எதிர்பார்த்து காத்திருப்பார்கள் !
வராததினால் வில்லியை எதுவும் செய்துவிட மாட்டார்களே ?
அதற்கு நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன் !

நீதானே கார் டிரைவர்?
ஆமாம் மேடம்! என் பெயர் மான்சன்!
மான்சன்! நீ ஒரு கார் விபத்தை ஏற்படுத்த வேண்டும்!
அந்த விபத்தில் மரியம் இறந்து விட்டதைப் போல ஜோடனை செய்ய வேண்டும்!
நான் மரியம் உடைகளை அணிந்து ஓட்டலைவிட்டு வெளியே வருவேன்! நீ காரில் தயாராக இருக்க வேண்டும்!
நான் ரோட்டை கடக்க சாலையில் இறங்குவேன்!
நான் உங்களை காரில் இடித்துத் தள்ளுவது போல காரை ஓட்ட வேண்டும்.
நீங்கள் கார் அருகே வந்ததும் கார் மோதியது போல பல்டியடித்து விடுங்கள்!
அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்!

மாடஸ்தி மரியத்தின் உடைகளை உடுத்திக்கொண்டாள்.
பிராங்க்! நீங்கள் ஆம்புலென்சை விபத்து நடந்த இடத்துக்கு உடனே அனுபபி வையுங்கள்!
நான் இப்போது ஆம்புலென்சுக்கு தகவல் கொடுத்துவிடுகிறேன்!
பார்ப்பவர்கள் என்னை அதாவது மரியத்தை மருத்துவ மனைக்கு கொண்டுசெல்வதாக நினைப்பார்கள்.
அங்கே அவள் இறந்து விட்டாள் என்று டாக்டர்கள் அறிவித்துவிடுவார்கள்!
அதற்குள் இவளை நாங்கள் மருத்துவ மனைக்கு கொண்டு வந்துவிடுகிறோம்!
மாடஸ்தி மரியத்தின் உடையில் ஓட்டலைவிட்டு வெளியே வந்து சாலையை கடக்க முயன்றார்.
ஏய்... பார்த்துப் போ! கார் வருகிறது!
அடுத்த நொடி— கார் மோதி அவள் தூக்கியெறியப்பட்டாள்.
அய்யோ... கண்ணை மூடிக்கொண்டா சாலையை கடப்பது?
முட்டாள்! முதலில ஆம்புலென்சுக்கு தகவல் கொடு!

மாடஸ்தி ஆம்புலென்சில் ஏற்றி அனுப்பப் பட்டாள்.
மேடம்! மான்சன் கச்சிதமாக விபத்தை ஏறபடுத்திவிட்டான்!
ஆமாம்! வேறு ஏதும் பிரச்சினை இல்லையே?
அடுத்த அரை மணியில் மருத்துவமனையில் உள்ள ஒரு அறையில மாடஸ்தி இருந்தாள்.
அலோ மாடஸ்தி! உன் இடத்தில் மரியத்தை கிடத்தி விட்டோம்!
யாராவது இந்த விபத்தைப் பற்றி அக்கறை எடுத்திருக்கிறார்களா?
இதுவரை இல்லை! நாங்கள் உன்னை உன்னிப்பாகவே கவனித்து வருகி றோம்!
சரி! வில்லியைப் பற்றி வேறு ஏதாவது செய்தி கிடைத்ததா?
வில்லி கொடுத்த இரகசிய சைகைப் படி– போன வாரம் வில்லி மான்ட்டானை பகுதிக்கு கடத்தப் பட்டி ருக்கிறான்!
மான்ட்டானாவில் ஒரு உயரமான மலை இருக்கிறது!
மலையா?
அந்த மலை உச்சியில் 1932–ல் சினிமாவில் உச்சத்தில் இருந்த நடிகர் ஒருவர் ஒரு வீட்டை கட்டியிருக்கிறார்! அதற்குப் பெயர்தான் ஃபோலி!
பிராங்க்! அதைப் பற்றி முழு விப ரத்தை எனக்குச் சொல்லுங்கள்!

பிராங்க் வரை படத்தைக் காட்டினார்.
இங்கேதான் மலை இருக்கிறது. அந்த 800 அடி மலை உயரத்தில் தான் மலை வீடு இருககிறது.
பெரிய பணமுதலைதான் வாங்கியிருக்க வேண்டும்.அவர்களைத் தவிர வேறு யாரும் அங்கே செல்ல முடியாது!
கெலிகாப்டரில்தான் செல்ல முடியும்!
யாருமே மேலே செல்ல முடியாத அளவுக்கு மலையின் அடிவாரம் அமைந்திருக்கிறது!
நாம் அங்கே கெலிகாப்டரில் செல்லலாம்!
வேண்டாம் பிராங்க்! நம்மை ரேடார் காட்டிக் கொடுத்துவிடும்! பிறகு வில்லிக்கு ஆபத்தாகிவிடும்!
நான் இந்த வேலையில் தனியாகவே செயல்படப் போகிறேன்!
சி.ஐ.ஏ. மிக வேகமாக செயல்படத் தொடங்கியது.
கென்னடி! ஹெலிகாப்டர் தேவை! உடனே புறப்படச் சொல்!
பாலைவன எல்லையில் இறங்கியதும் அங்கே ஒரு கார் தயாராக இருக்க வேண்டும்!

பிராங்க்! வில்லியை காப்பாற்ற எனக்கு உதவிகள் செய்தமைக்கு மிக்க நன்றி! நான் புறப்படுகிறேன்!
வெற்றி உனக்கே!
மாடஸ்தி தயாராக இருந்த காரில் ஏறி மான்ட்டானாவின் நோக்கி பயணமானாள் பாதை கரடுமுரடாக இருந்தது.
மலைவீட்டுக்கு ஐந்து மைலுக்கு முன்பே காரை நிறுத்திவிட்டு நடந்து செல்வது தான் நல்லது!
இதோ இங்கே இரவு தங்கி நாளை எப்படியாவது மலையின் அடிவாரத்துக்குசென்று விட வேண்டும!
இங்கே ஏதோ வீடு இருப்பது போலத் தெரிகிறது!
ஒரு பெரியவர் அங்கே வந்தார்.
யார் நீ?

குட்மார்னிங்! நான் ஒரு ஆராய்ச்சியாளர்! இங்கு யாராவது இருக்கி றார்களா?
ம்...ம்...!
நான்தான் இங்கே வசிக்கிறேன்!
என் பெயர் கஸ்! என் ஒருவனைத் தவிர இந்த பிரதேசத்தில் வேறு யாரும் கிடையாது!
உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி!
எனக்கு அது தேவையில்லை! இந்த எந்திரத்தைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அதி லும் குறிப்பாக பெண்கள் எனக்கு ஆகவே ஆகாது!
அதனால் நீ வந்த வழியை பார்த்துச் செல்ல லாம்!
இவரை எப்படி யாவது நண்பராக்கிக் கொள்ள வேண்டும்!
அடேயப்பா எத்தனை விருதுகள். கிராஸ், புரோன்சி, ஸ்டார், அமெரிக்க விருது என்று பல வெற்றிகளை குவித்திருக்கிறீர்களே

நீங்கள் வாங்கிய விருதுகளைப் பார்த்தால் இராணுவத்தில் உயர்பதவியே உங்களுக்கு கொடுக்க வேண்டுமே!
சரியாகச் சொன்னீர்கள் மேடம்!
விருதுகளைப்பற்றிய பெருமைகளை அழகாக சுட்டிக் காட்டிவிட்டாயே?
கஸ்! எனக்கும் விருதுகள் என்றால் பிரியம்!
வாம்மா! என் வீட்டுக்கு வந்து ஒரு கப் காபி சாப்பிடும்மா!
கண்டிப்பாக வருகிறேன் கஸ்!
மாடஸ்தி வீட்டுக்குள் நுழைந்தாள்.,
கஸ்! இந்த வீட்டில் நீங்கள் தனியாகத்தான் இருக்கிறீர்களா?
இல்லை என்னுடன் ஷீபா, சாலமோன் இருக்கிறார்கள்!
ஷீபா...சாலமோனா...?
ஆமாம்! உணவுக்காக வெளியே போயிருக்கிறார்கள்!
இதோ வந்துவிட்டார்களே! பார்ப்பதற்கு முரடர்களாக தெரிவார்களே தவிர பழகுவதற்கு இனிமையானவர்கள்!

இரண்டு கழுகுகள் கஸ்சைத் தேடி வந்தன.
ஏய் சாலமோன் எனக்கு இன்று நல்ல உணவைத்தான் கொண்டு வந்திருக்கிறாய்!
இவன்தான் சாலமோன்! அவள் ஷீபா! இவர்கள் தினமும் எனக்கு சாப்பிட ஏதாவது கொண்டுவருவார்கள்!
கஸ்! இவைகளை எப்படி பழக்கினீர்கள்?
வா வந்து உன் கையைக் காட்டு! உன் கையில் நிற்கவைக்கிறேன்!
ஐந்து ஆண்டுக்கு முன்பு 600 அடி உயரத்தில் இருந்த கூட்டில் குஞ்சுகளாக இருந்த இவைகளை எடுத்து வந்தேன்!
சாலமோன் மாடஸ்தியின் கையில் அழகாக நின்றது.
வா ஷீபா! நம்மைப் பார்க்க விருந்தாளி வந்திருக்கிறார்!
மலை வீட்டுக்குச் செல்ல இவைகளை பயன்படுத்திக்கொள்ளலாமே?
மாடஸ்திக்கு திடீரென்று யோசனை தோன்றியது.
வா! இவைகள் நமக்காக முயலைக் கொண்டுவந்திருக்கிறது. சமைத்து சாப்பிடலாம் வா!

இவைகள் எப்படி உங்களை புரிந்து நடக்கிறது!
சிறியவைகளாக இருக் கும்பொழுதே பழக்கி விட டேன்!
இருவரும் சாப்பிட்டார்கள்.
என்னைவிட நீ ருசியாக சமைத்து இருக் கிறாய்!
நன்றி கஸ்! உங்களைப் பார்த்தால் இன்னும் 25 வயது இளைஞனைப் போல இருக்கிறீர்கள்!
அப்படியா? ஹா...ஹா...ஹா...! எதற்காக இங்கே வந்திருக்கிறாய்!
பிறகு சொல் கிறேன்!
அந்த கழுகுகளை பற்றி சொல்லுங்களேன்! எப்படி இப்படி பழக்கினீர்கள்? அதைச் சொல் லுங்களேன்!
© 1979 Beaverbrook Newspapers, Ltd.
கழுகுகளுக்கு பார்வை சக்தி நம்மைவிட பத்துமடங்கு அதிகம்! அரை மைல் தூரத்தில் முயல் இருந்தாலகூட எளிதில் கண்டுபிடித்துவிடும்! தினமும் அணில, முயல், பாம்பு, ஆந்தைகள் தான் உணவு!
© 1979 Beaverbrook Newspapers, Ltd.

ஆணைவிட பெண் பெரியதாக இருக்கும்! பெண் 13 கிலோ எடை இருக்கும்! ஆண் 9 கிலோ இருக்கும்!
கூட்டில் இருந்தா இவைகளை எடுத்தீர்கள்?
12 வார குஞ்சாக இருக்கும்போதே எடுத்து வந்து விட்டேன். அப்போது இவைகளுக்கு பறக்கத் தெரியாது!
இந்த கயிற்றை மேலே தூக்கிப் போட்டு சாலமோனுக்கு சைகை காட்டினால் கயிற்றை சரியாக பிடித்துக் கொள்ளும்!
கஸ்! முன்பு மன்னர்கள் இந்த கழுகுகளை பயன் படுத்தி நிறைய சாதித்திருக்கிறார் களாமே?
ஆமாம்! ஷீபா... நீயும் போ!
கஸ்! நீங்கள் மலைவீடு பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அங்கே சென்று இருக்கிறீர்களா?
தெரியும்! ஆனால் சென்றதில்லை! அங்கே செல்வது கடினம்!

நடந்தோ மலையில் ஏறியோ செல்ல முடியாது!
அங்கே சில கடத்தல் காரர்கள் இருக்கிறார் களாமே!
நீ ஏன் அந்த மலைவீட்டைப் பற்றி விசாரிக்கிறாய்? நகரத்தில் வசதி படைத்தவர்கள் ஹெலிகாப்டரில் அங்கு செல்வார்கள்!
நாட்டின் சமுகவிரோதிகள் அவர்கள்! அவர்கள் என் நண்பரை அங்கே கடத்தி சிறைவைத்து அவரை கொஞ்சம் கொஞ்சமாக பைத்தியக்காரனாக்கி வருகிறார்கள்!
என்ன நடந்தது என்று முழுமையாகச் சொல்!
மாடஸ்தி நடந்ததை முழுவதும் சொன்னாள்.
என்ன அநியாயம் இது! ஒருவனை பிடித்து அவனை கோழையாக்க ஊசி போடு கிறார்களே?
அவரை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும்!
ஓ.கே. மிஸ்ஸி! எப்படி செல்லப் போகி றாய்?
நீங்கள்தான் யாருமே மேலே சென்றதில்லை என்கிறீர்கள்? அங்கே செல்ல வேறு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்!
சரி மலைவீட்டுக்கு சென்றபிறகு என்ன செய்வாய்?
வில்லியை கண்டுபிடித்து கீழே கொண்டுவர வேண்டும்!

மேலே செல்ல நான்கு வழி இருந்தது.. இப்போது அவற்றை அடைத்துவிட்டு ஹெலிகாப்டர் மூலமே செல்ல முடியும்!
மலை ஏறிச்செல்ல சுத்தி, கயிறு வைத்திருக்கிறாயா?
எல்லாம் தயாராக இருக்கிறது. பாறையில் சுத்தியால் அடித்தால் சத்தம் வராதா?
கடைசி 200 அடி உயரம் செல்வதற்கான ஆயுதம் எல்லாம் இருக்கிறது! ஆனால்—
அதை முதலில் யார் உயரே தூக்கிச் செல்வது?
அவ்வளவு உயரத்துக்கு கயிற்றை தூக்கி வீசவும் முடியாது!
ஆமாம்! ஆனால் அதற்குத்தான் சாலமோன், ஷீபா இருக்கிறதே!
வெரிகுட் ஐடியா!
அன்று இரவு மாடஸ்தி, கஸ் இருவரும் மலை அடிவாரத்துக்கு வந்தார்கள்.
சாலமோனையும் ஷீபாவையும் கையோடு அழைத்து வந்து விட்டேன்!

மாடஸ்தி 600 அடி தூரம் பாறைகளை பிடித்து ஏறிவிடலாம்!
கஸ்! நீங்கள் எனக்கு உதவுவதே பெரிது! இதில் துப்பாக்கியை ஏன் சுமக்கிறீர்கள்?
நான் வெளியே எங்கு சென்றாலும் துப்பாக்கி என்னோடுதான் இருக்கும்!
இருவரும் பேசிக் கொண்டே பாறைகளை பிடித்துப் பிடித்து 400 அடி உயரதுக்கு வந்து விட்டார்கள்.
மிஸ்ஸி! இங்கு கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்கிறாயா?
கஸ்! நீங்களே தொடர்ந்து ஏறும்போது எனக்கு ஓய்வு தேவையில்லை!
பெண்கள் மலை ஏறுவது என்பது சுலபமான காரியமல்ல! ஆனால் நீ தைரியசாலி தான்!
இப்போது இருவரும் 600 அடி உயரத்துக்கு வந்திருந்தார்கள்.
மிஸ்ஸி! இனி மேலே பிடித்து ஏறுவதற்கு சிரமமாக இருக்கும்!

உடனே கஸ் தன் குழலை எடுத்து
ஊதினார்!
அங்கே சுற்றிக்
கொண்டிருந்த சாலமோனும்,
ஷ்பாவும் குழல் சத்தம்
கேட்டதும் வேகமாக வந்தன.
உடனே மாடஸ்தி பாறையில் கவ்விக்
கொள்வதற்கு தோதுவாக சிறிய
நங்கூரம் கட்டியிருந்த கயிற்றை மேலே
வீசினாள்.
ம்... கயிற்றை
தூக்கிப் போடு!
சாலமோன் சரியாக கயிற்றின்
நுனியை பிடித்துக்கொண்டு
பறந்தது.
ம்... மேலே
போடா!
சாலமோன் மேலே
போகிறதா?
பயப்படாதே!
அது வட்டமடித்து
வட்டமடித்துதான்
மேலே செல்லும்!
மேலே சென்றதும்
நான் சொன்னதும்
கயிற்றை
விட்டுவிடும்!
சாலமோன்
வட்டமடித்த
படியே மேலே
சென்றது.

மேலே சென்றதும் கஸ் விசிலடித்தார். உடனே கழுகு கயிற்றைவிட்டது. கயிறு சரியாக ஒரு பாறையை கவ்விக்கொண்டது.
பரவாயில்லை. முதல் முயற்சியிலேயே கயிறு பாறையில் நன்றாக மாட்டிக் கொண்டது!
கஸ்! நான் கயிற்றை பிடித்து மேலே செல்கிறேன்!
அதன்பிறகு இருவரும் கயிற்றைப் பிடித்து ஏறினார்கள்.
கஸ்! ரொம்ப நன்றி! இனி நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் கீழே செல்லுங்கள்! என்னால் உங்களுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது!
ஓ.கே. மிஸ்ஸி! வெற்றிபெற வாழ்த்துக்கள்!
அதன்பிறகு மாடஸ்தி கயிற்றை பிடித்து மேலே சென்றாள்.
ஆ... மூச்சுவாங்குகிறது! பத்து நிமிடம் ஓய்வெடுத்துவிட்டு மேலே போகலாம்!
அதன்பிறகு சிறிது நேரத்தில் மாடஸ்தி மேலே வந்து சேர்ந்தாள்.
இன்னும் சிறிது நேரத்தில் விடிந்துவிடும்! அதன்பிறகு வெளிச்சம் வந்துவிடும்!

இங்கே எப்படியும் மூன்று அல்லது நான்கு பேர் காவலுக்கு இருப்பார்கள் !
சிறிது நேரத்துக்குப் பிறகு— ஒரு ஹெலிகாப்டர் அங்கே வந்தது.
ஹெலிகாப்டரில் அலெக்ஸ் வருகிறான் என நினைக்கிறேன் !
ஹெலிகாப்டரைப் பார்த்ததும் மாடஸ்தி ஓடத் தயாரானாள்.
ஹெலிகாப்டர் இறங்குவதற்குள் மலை வீட்டுக்குள் ஓடிவிட வேண்டும் !
உடனே மாடஸ்தி ஓட்டம் பிடித்தாள். அப்போது அங்கே சுழன்றுகொண் டிருந்த விளக்கொளியில் மாடஸ்தி சிக்கினாள்.
அலெக்ஸ் யாரோ வீட்டுக்குள் ஓடுவது போலத் தெரிகிறது !
ஆமாம் ! ஒரு பெண் போலத் தெரிகிறதே !
ஹெலிகாப்டர் இறங்கியது. அதற்குள் மாடஸ்தி ஒரு அறையின் பூட்டை வெடி வைத்து வெடித்தாள்.

அவர்கள் என்னை பார்த்திருப்பார்கள். அவர்கள் கண்களில் படாமல் கச்சிதமாக வேலையை முடிக்க வேண்டும்!
ஏய்... வீட்டைச் சுற்றி பாதுகாப்பை பலப்படுத்து! அவளை தப்ப விடக்கூடாது!
ஏய்... அவள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று விட்டாள்! விடாதே!
மாடஸ்தி வீட்டுக்குள் இருந்தபடியே அவர்களை நோக்கிச் சுட்டாள்.
ஏய்... அவள் நம்மை முட்டாளாக்கப் பார்க்கிறாள்!
அவர்களில் சிலரை வரிசையாக சுட்டுத் தள்ள வேண்டியதுதான்!
டுமீல்...!

பதுங்கியிருந்த அலெக்ஸ் பதறினான்.
என் ஆட்கள் ஒவ்வொருவராக சுட்டுத் தள்ளி என் பலத்தை குறைக்கப் பார்க்கிறாள்!
இன்னும் இருவர்தான் இருக்கிறார்கள்!
அவர்களிடத்தில் எந்திரத் துப்பாக்கி இருக்கிறது! அதை முதலில் பறிக்க வேண்டும்!
ஒருவன் மாடஸ்திக்கு பின்னே பூனை போல துப்பாக்கியுடன் வந்தான்.
இப்படியே பதுங்கிச் செல்வோம்!
அப்போது விசில் சத்தம் கேட்டது.
கஸ் வந்து விட்டாரா?
துப்பாக்கியுடன் இருப்பவன் மீது கழுகு பாய்ந்து அவனைத் தாக்கியது.
சாலமோனும் ஷீபாவும் அவனை மாறி மாறி கொத்தித் தள்ளியது.

கஸ் மேலே ஏறிவந்தார்.
சாலமோன் ஷீபா நல்ல காரியம் செய்தீர்கள்!
கஸ்! நீங்களா?
ஆமாம் மிஸ்ஸி! உனக்கு உதவவே வந்தேன்!
கஸ் நான் உள்ளே செல்கிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்!
ஓ.கே.!
சாலமோனும், ஷீபாவும் அவர்கள் இருக்கும் இடத்தை வட்டமிட்டுக் காட்டும். நீ அதற்கு எதிர் புறமாக செயல்படு!
கஸ் சொன்னபடியே மாடஸ்தி வீட்டுக்குள் நுழைந்தாள்.
வில்லியை சிறையில்தான் வைத்திருப்பார்கள்!
அதோ அந்த சன்னல் வழியாக பார்த்துவிட்டு மேற்கொண்டு தொடர்வோம்!

வில்லி இருந்த அறையில் ஒரே ஒருவன் மட்டும் பாதுகாப்புக்கு இருந்தான். வில்லி அங்கு வாடி வதங்கிக் கிடந்தார்.
வெளியே—
துப்பாக்கிச் சத்தத்தைக் காணவில்லையே! அவனுடன் இன்னொருவனும் இருப்பது போலத் தெரிகிறது!
நாம் இங்கே பதுங்கி இருப்பதை இந்தக் கழுகுகள் காட்டிக் கொடுத்துவிடும் போலிருக்கிறதே!
வந்திருப்பது மாடஸ்திதான்! அவள்தான் மரியத்தை கொன்று விட்டு இப்போது நம்மையும் கொல்ல வந்திருக்கிறாள்!
அலெக்ஸ்! ஆத்திரப் படாதீர்கள்!
மாடஸ்தி வில்லியை அடைத்து வைத்திருந்த அறைக்கு வெளியே நின்று குரல் கொடுத்தாள்.
வில்லி...! வில்லி...!
இதுதான் சிறை! இதற்குள்தான் வில்லி இருக்க வேண்டும்!

சிறைக்குள் ஒருவன் தயாராக இருந்தான்.
அவள் பூனை போல அடியெடுத்து வருகிறாள். வரட்டும் சுட்டுத் தள்ளுகிறேன்!
மாடஸ்தியின் வருகைக்காக காத்திருப்பவன் பொறுமை இழந்தான்.
எங்கே அவளைக் காணவில்லை?
இங்கேதான் வந்தாள்? எங்கே போயிருப்பாள்?
உடனே அவன் சிறிய சன்னலை திறந்து பார்த்தான்.
அவ்வளவுதான் அடுத்த நொடி மாடஸ்தியின் துப்பாக்கி அவனை சல்லடையாக துளைத்தெடுத்தது.
மாடஸ்தி வில்லியை பார்த்து கலங்கிப்போனாள்.
வில்லி... வில்லி! என்னைத் தெரிகிறதா? அட கடவுளே எப்படி இருந்தவர் இப்படிக் கிடக்கிறாரே!
வில்லி கண்களை திறந்து பார்த்தார். வார்த்தை குளறியது.
மாடஸ்தி...! நீ என்னை காப்பாற்றத்தானே வந்திருக்கிறாய்...! எனக்காகத்தானே...!

ஆமாம் வில்லி! உங்களுக்காகத்தான் வந்திருக்கிறேன்!
ஆ... என் தலை சுற்றுகிறதே! எதுவுமே புரியவில்லையே! மாடஸ்தி... என்னைவிட்டுப் போய்விடாதே!
வில்லி துடித்தார்.
வில்லி என்ன ஆயிற்று! என்ன நடந்தது?
என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை!
திடீரென்று என் முன்னே பெரிய நாய்கள், டைனோசர் என்று பாய்ந்து வருகின்றன. எதுவுமே புரியவில்லை!
வில்லி! நான்தான் வந்து விட்டேனே. இனி உனக்கு எதுவும் ஆகாது! ஆகவும் விட மாட்டேன்!
டேய் அலெக்ஸ்! என் வில்லியை இப்படி கோழையாக்கிவிட்டாயே...
வா வில்லி! இப்படி உட்கார்...! என்னுடன் ஏதாவது பேசு!
மாடஸ்தி நான் நன்றாக இருக்கிறேன்! ஆனால்...
திடீரென்று வில்லி அலறினார்.
ஆ...!
இல்லை... இல்லை!
வில்லி...!

மாடஸ்தி வில்லிக்கு எதிராக போராட வேண்டியது வந்தது.
ஏய்...!
திடீரென்று வில்லி மயக்கமாகிப் போனான்.
அடப்பாவமே! நன்றாகப் பேசிக் கொண்டிருந்தவர் மனம்மாறி என்னை கொல்லவந்து விட்டாரே!
இந்த ஊசியை வில்லிக்கு போட்டால் கொஞ்ச நேரத்தில் பலம் கிடைக்கும்! அதற்குள் வெளியே கஸ்க்கு உதவியாக செயல்படுவோம்!
அடுத்த ஐந்து நிமிடத்தில் மாடஸ்தி வெளியே வந்தாள்.
கஸ்! என்னாச்சு?
மாடஸ்தி! நான் ஒருவனை சுட்டுத் தள்ளிவிட்டேன்! இரண்டு பேர்தான் இருப்பார்கள்!
அதோ சாலமோன் ஹெலிகாப்டரை வட்டமிடுகிறது! அவர்கள் தப்பிச் செல்கிறார்கள் என நினைக்கிறேன்!
ஏய்... ஹெலிகாப்டரை வேகமாக கிளப்பு!
அலெக்ஸ் ஓடிவந்தான்.

மிஸ்ஸி! நான் சொன்னது சரிதான்!
விடமாட்டேன்! அலெக்ஸை தப்பிக்கவிடமாட்டேன்!
ஹெலிகாப்டர் புறப்பட்டது.
மிஸ்ஸி! இனி என்ன செய்வது?
ஹெலிகாப்டர் உயர கிளம்ப இருவரும் அதை சுட்டுத் தள்ளினார்கள்.
டுமீல்....
டுமீல்....!
அதில் ஒரு குண்டு பைலட்டின் நெஞ்சை பதம்பார்த்தது.
ஆ... ஆலெக்ஸ! இனி என்னால் ஹெலிகாப்டரை இயக்க முடியாது!
ஹெலிகாப்டர் தாறுமாறாக ஓடியது. அதற்குள் அவர்களின் துப்பாக்கியும் காலியானது.
நம்முடைய குறி தப்பவில்லை!
அங்கே பார்!

ஹெலிகாப்டர் மலை விளிம்பில் மோதியது.
ஹெலிகாப்டர் ஊசிமுனை அளவில் தொடுக்கி நின்றது.
மாடஸ்தி! என்னைக் காப்பாற்று...!
எத்தனை பேரை அநியாயமாக கொன்றிருப்பாய்?
எப்படி இருந்த வில்லியை இப்படி ஆக்கிவிட்டாயே... உனக்கு தேவையான முடிவுதான்!
அடுத்தநொடி ஹெலிகாப்டர் 800 அடி உயரத்தில் இருந்து பாதாளத்தில் விழுந்தது.
ஆ... ஆ...!
மலைவீட்டில் நடந்த சண்டை முடிவுக்கு வந்தது.
மிஸ்ஸி! நமக்குத்தான் வெற்றி!
ஆமாம் கஸ்!
மிஸ்ஸி! உன் நண்பரை பார்த்தாயா? எப்படி இருக்கிறார்!
இருக்கிறார்! திடீர் திடீரென்று ஆளே மாறிவிடுகிறார்! முதலில் அவரை காற்றோட்டமாக வெளியே கொண்டு வரவேண்டும்!

வில்லியை வெளியே கொண்டுவந்தார்கள்.
மிஸ்ஸி! ரேடியோ மூலம் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு ஆட்களை வரச்சொல்!
வேண்டாம் கஸ்!
டாக்டர் வந்தால் உதவியாக இருக்குமே!
இல்லை! இவருக்கு மருத்துவ சிகிச்சையை விட முதலில் மனோதிடத்தை கொண்டுவர வேண்டும்!
ஊசியை போட்டுப் போட்டு இவருடைய மூளையை மழுங்கடித்திருக்கிறார்கள்!
அதற்கு என்ன செய்யப் போகிறாய்?
நான் அவரை சுயநினைவுக்கு கொண்டுவந்து அவர் மூளையை சலவை செய்யப் போகிறேன்!
அது எப்படி முடியும்?
ஒரு சின்ன நாடகம் ஆடவேண்டியதுதான்!
விவரமாக சொல்கிறேன் கேளுங்கள்!

கஸ்! என் வயிற்றில் காயம் ஏற்பட்டதைப் போல பாண்டேஜ் கட்டுங்கள்!
இதைப் பார்த்தால் வில்லி எழுந்துவிடுவாரா?
நான் வில்லிக்கு ஒரு ஊசி போடப் போகிறேன்!
ஒரு மணி நேரத்துக்குள் அவர் எழுந்துவிடுவார்!
நானும் ஒரு மயக்க ஊசி போட்டுக் கொள்கிறேன்! பிறகு பாருங்கள்!
ஊசி போட்ட சிறிது நேரத்தில் வில்லி கண்விழித்தார். பழைய நினைவுகள் திரும்பின.
ஆ...! மாடஸ்தி என்னைக் காப்பாற்ற வந்தாளே! அவளை எங்கே?
நான் கஸ்! அதோ அங்கே மாடஸ்தி அபாயத்தை எட்டிக்கொண்டிருக்கிறாள்!

மாடஸ்தி அங்கே காயத்துடன் மயங்கிக்கிடப்பதை வில்லி பார்த்தார்.
ஆ... மாடஸ்தி!
மாடஸ்தி என்னாச்சு?
துப்பாக்கி குண்டு அவள் வயிற்றில் பாய்ந்துவிட்டது!
அவளை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லாவிட்டால் இறந்துபோவாள்!
வில்லி! நாம் 800 அடி உயரத்தில் இருக்கிறோம். சுற்றிலும் பார்!
வில்லிக்கு கொஞ்சம் கொஞ்சமாக சுயநினைவு திரும்பிக்கொண்டிருந்தது.
மாடஸ்தி இதன் வழியாக ஏறித்தான் உன்னைக் காப்பாற்றினாள்!
நான் கீழே இறங்கி அருகில் எங்காவது போன் செய்து உதவி கேட்கிறேன்!
அவள் உடம்பில் உயிர் இருக்காது!
அதைக் கேட்டு வில்லியின் முகம் இறுகியது.
அப்படியானால் அவளை நானே தூக்கிச் செல்கிறேன்.

வில்லி மாடஸ்தியை முதுகில் தூக்கிக் கொள்ள கஸ் இருவரையும் கட்டினார்.
பார்த்து! இது தற்கொலைக்கு சமமான முயற்சி!
கஸ்! என் உயிரைக் கொடுத்தாவது இவளை காப்பாற்றுவேன்!
உன் தைரியத்தை பாராட்டுகிறேன்!
அவள் எனக்காக 800 அடி உயரத்தில் ஏறி என்னைக் காப்பாற்றிவிட்டு அவள் சாகக் கிடக்கிறாளே!
அந்த கயிற்று வழியாக இறங்கு! நான் கூடவே வந்து உதவுகிறேன்!
மாடஸ்தி நல்ல மயக்கத்தில் இருந்தாள்!
இவளை எப்படி இறக்கப் போகிறேன் என்று தெரிய வில்லையே!
வில்லி மாடஸ்தியை சுமந்தபடியே கயிற்றில் இறங்கினார்

இது மரண விளையாட்டு மாதிரி! ஆபத்து என்று தெரிந்தும் மாடஸ்தி நாடகமாடுகிறாளே!
மாடஸ்தி இதயம் நார்மலாகத்தான் இருக்கிறது! எப்படியும் இவளை காப்பாற்றியே ஆகவேண்டும்!
வில்லி வைராக்கியத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார்.
ஆ... ஆ... என் கை வழுக்கு கிறதே! தசைகள் எல்லாம் வலிக் கிறதே!
திடீரென்று வில்லியின் மனநிலை மாறியது. சட்டென்று பிடி தளர்ந்து கீழே விழ முயன்றார்.
இல்லை!
அதற்குள் சட்டென்று கயிற்றை பிடித்து நிதானத்துக்கு வந்தார்.
கஸ்! என்னிடம் ஏதாவது பேச்சு கொடுத்துக் கொண்டே வாருங்கள்!
பரவாயில்லை சுதாரித்துக்கொண்டான்!
கஸ்! என்னிடம் எதையாவது பேசுங்கள்! என் மனநிலை மாறப் பார்க்கிறது!

ஓ.கே. வில்லி!
மாடஸ்தியும் நானும் மேலே வருவதற்கு சாலமோனும் ஷீபாவும்தான் உதவினார்கள்!
கஸ் பேச்சுக் கொடுக்க வில்லியின் மனநிலை சரியானது.
ஓ.கே.! ஆமாம் சாலமோன், ஷீபா என்பது யார்?
இரண்டு மணிக்குள்— வில்லிக்கு மூன்று தடவை மனநிலை பாதிக்கப் பட்டாலும், தன் சுயமுயற்சியால் அதனை முறியடித்து தொடர்ந்து இறங்கினார்.
பாறையை பிடித்து பிடித்து வில்லியின் கையில் இருந்து இரத்தம் வடியத் தொடங்கியது.
முடிவில்— பல போராட்டங் களுக்குப் பிறகு வில்லி மலையின் அடிவாரத்தைத் தொட்டார்.
மாடஸ்தி! எப்படியோ அடிவாரத்துக்கு வந்து விட்டோம்!
ஹா...ஹா... வில்லி நீ தரையைத் தொட்டு விட்டாய்!
கஸ் மகிழ்ச்சியில் குதூகலித்தார்

கஸ்! மெதுவாக கயிற்றை அவிழ்த்து மாடஸ்தியை கீழே படுக்க வையுங்கள்!
ஏதும் அசம்பாவிதம் நடக்காமல் வந்து சேர்ந்து விட்டோம்!
கஸ்! நானா 800 அடி இறங்கினேன்! எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!
கஸ்! உடனடியாக டாக்டருக்கு ஏற்பாடு செய்யுங்கள்!
தேவையில்லை வில்லி! நானும் மாடஸ்தியும் சேர்ந்து அப்படி நடித்தோம்! இங்கே பார்! அவளுக்கு எந்தக் காயமும் இல்லை!
என்ன மாடஸ்திக்கு காயம் இல்லையா?
வில்லி மகிழ்ந்துபோனான்.
மாடஸ்தி! இறங்கும்போது ஏதாவது ஆகி இருந்தால் என்னோடு சேர்ந்து நீயும் செத்திருப்பாயே!
இல்லை வில்லி! உன் மனநிலையை மாற்றத் தான் மாடஸ்தி இப்படிச் செய்தாள்!

முடிவில் வில்லியும் அப்படியே சரிந்து விழுந்துவிட்டார்.
ஓ.கே. வில்லி! நீயும் ஓய்வு எடு! மாடஸ்தி சொன்னதுபோல இந்த ரேடியோவில் செய்தி அனுப்புகிறேன்!
100 மைலுக்கு அப்பால் தற் சமயத்துக்காக ஒரு கண்ட்ரோல் ரூம் அமைத்திருந்தார்கள்.
யாராவது இருக்கிறீர் களா? நான் பேசுவது கேட்கிறதா?
யாரோ பேசு கிறார்களே!
யார் என்று பார்!
மலை அடிவாரத்தில் இருந்து கஸ் பேசினார்.
நீங்கள் யார்? எதற்கு கூப்பிடுகிறீர்கள்?
நான் கஸ் பேசுகிறேன்! நான் மேலே இருந்து கீழே வந்து பேசுகிறேன்!
1910
கஸ் நீங்கள் பேசியதில் மிக்க மகிழ்ச்சி! இந்த ரேடியோ எப்படி கிடைத்தது?
மிஸ்ஸிதான் கொடுத்தாள்! மலை வீட்டில் இருந்து இறங்கியதும் இதில் பேசச் சொன்னாள்!
அவளுடைய நண்பரை— மனநிலை பாதிக்கப் பட்டிருந்தவரை. பத்திரமாக கொண்டு வந்துவிட்டோம்!

யாரது சாலமோன், ஷீபா?
கஸ் யாரென்று தெரியவில்லையே!
பிராங்க், ஜெரால்டும் குழம்பிப்போனார்கள்.
கஸ்! எங்கே இருந்து பேசு கிறீர்கள்? யார் அந்த மிஸ்ஸி? அவளுடைய நண்பர் யார்?
அவர்கள் இங்கேதான் மலையடிவாரத்தில் மயங்கிக் கிடக்கிறார்கள்! அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை!
ஜெரால்டு! உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?
பிராங்க்! அவர் மாடஸ்தியைத்தான் மிஸ்ஸி என்று அழைக்கிறார். வில்லியை அவள் நண்பன் என்கிறார்!
இங்கே பாருங்கள் கஸ்! நீங்கள் அங்கே இருங்கள். நாங்கள் ஒரு மணி நேரத்தில் அங்கே இருப்போம்!
விரைவாக வாருங்கள்!
ஏய்... டாக்டரையும், பைலட்டையும் உடனே வரச்சொல்!

மாடஸ்தி மயக்கம் தெளிந்து எழுந்தாள்.
நான் எங்கே இருக்கிறேன்?
மிஸ்ஸி! நாம் கீழே வந்துவிட்டோம்!
என் திட்டப்படியே வில்லிதான் என்னை தூக்கி வந்தாரா? ரேடியோ வில் செய்தி சொல்லி யாச்சா?
ஆமாம்! வந்துவிடு வார்கள்.
© 1979 Beaverbrook Newspapers.
ஹெலிகாப்டர் வந்தது.
மேலே ஆறு பேர் இறந்து கிடக்கிறார்கள் ஹெலிகாப்டரை கீழே இறக்கு!
மாடஸ்தி சரியான கில்லாடிதான்!
ஹெலிகாப்டர் தரை இறங்கியது.
மாடஸ்தி! யார் இவர்? எங்களை அருகே விட மறுக்கிறார்!
யார் நீங்கள்?
நான் டாக்டர் ஹார்வி! மனநல மருத்துவர்!
மாடஸ்தி! என்ன இது?
கஸ் வந்தவர்களை தடுத்து நிறுத்தினார்
நீங்கள் என்னை கொல்ல வந்திருப் பதாக நினைக் கிறார்!
வில்லிக்கு ஒன்று மில்லை! நீங்கள் போகலாம்!

பிராங்க்! மனநிலை பாதிக்கப் பட்டவரை இப்படியே விட்டுச்செல்வது ஆபத்து!
உன்னைப் பார்த்தால் குதிரை டாக்டர் மாதிரி இருக்கிறது!
போகிறாயா இல்லை உன்னை கழுதை மீது கட்டி அனுப்பட்டுமா?
வில்லி அவராகவே எழுந்திருக்க வேண்டும். அப்பதான் சுயமாக தன் பழைய நினைவுக்கு திரும்பியிருக்கிறார் என்று கண்டு பிடிக்க முடியும்!
போகமாட்டீர்கள்? சாலமோன்! ஷீபா!
அடக் கடவுளே... கழுகுகள் வருகிறதே!
என்னை அழைத்துவந்து இப்படி அவமானப படுத்துகிறீர்கள்?
இல்லை டாக்டர்! மாடஸ்தி காரணமில்லாமல் இப்படி நடந்துகொள்ள மாட்டாள்!

பத்து நிமிடத்துக்குப் பிறகு வில்லி கண்விழித்தார்.
என்ன வில்லி எப்படி இருக்கிறது?
மாடஸ்தி! என்னால் உனக்கு சிரமம்!
மாடஸ்தி வில்லியை கைத்தாங்கலாக அழைத்து வந்தாள்.
வில்லி! எப்படி இருக்கிறது?
பழைய நிலைக்கு வந்துவிட்டேன்! உடம்பில் அசதி இருக்கிறது!
கஸ்! அரசாங்கத்திடம் சொல்லி உங்களுக்கு புது விருது வாங்கித் தருகிறேன்!
விருதுக்காக இதை செய்யவில்லை. மிஸ்ஸிக்காக செய்தேன்!
நேரம் கிடைக்கும்பொழுது இருவரும் இந்த கிழவன் இடத்துக்கு வர வேண்டும்!
ஓ.கே. கஸ்!
மாடஸ்தி சட்டென்று கஸ்சை கட்டிப்பிடித்தாள்.
கஸ்! இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்!
ஆ.... ஆ... பெண் வாடையே கூடாது என்கிறேன். இப்படி என்னை கட்டிப் பிடிக்கிறாயே! எல்லாரும் நம்மையே பார்க்கிறார்கள்!
(முடிந்தது)

படக்கதை தொடர் – 8

முகமூடி வீரர் மாயாவி

ஏய்... நரகத்துக்கு போனவர்கள் திரும்பியதில்லை!
எப்படியும் அவன் வருவான்!
மாயாவியைப் பார்த்து அங்குள்ளவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.
மாயாவி!
சாகா வரம் பெற்றவர்!
மாயாவி! நீங்கள் எப்படி இங்கே?
என் நண்பன் வாரனை அழைத்துச் செல்ல வந்தேன்!

நீங்கள் செய்த குற்றத்துக்கு உங்களை இங்கே அனுப்பி யிருக்கிறார்கள்!
நான் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய இங்கு வரவில்லை!
நான் வாரனை விடுவிக்க வந்திருக்கிறேன்!
மாயாவி! நான் வரவில்லை! ஊருக்கு வந்தால் யாரும் என்னை மதிக்க மாட்டார்கள்!
அதை மாற்றிக் காட்டுவோம்!

இங்குள்ள வழக்கப்படி என்னுடன் சண்டையிடு!
ம்... வாரன்! என்னைத் தாக்கு!
!!
மாயாவி வாரனை சண்டைக்கு இழுத்தார்.
மாயாவியுடன் நான் எப்படி மோதுவேன்?
பளார்!
மாயாவி அவன் கன்னத்தில் ஒன்று கொடுத்தார்.
ம். என்னை திருப்பித் தாக்கு!
மாயாவி விடவில்லை!
கும்...!

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

அடுத்த
காமிக்ஸ்

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்



யார் குற்றவாளி

காட்டு இளவரசன் கொல்லப்பட்டான்.
கொன்றது யார்?
துப்பறிய வருகிறார் மாயாவி!

வித்தியாசமான மாயாவி படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

பிப்ரவரி 16
"ராணி காமிக்ஸ்" இதழில்
இடம்பெறுகிறது.

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

Regd. with the Registrar of Newspaper for India under No. 42576/84 – ISSN 0971–8567

February 1, 2000.

RANI COMICS (TAMIL FORTNIGHTLY)

தன்மானச் சிறுத்தை!

பாலூட்டி மிருகங்களிலேயே மிகவும் வேகமாக ஓடக்கூடியது சிறுத்தைதான். அதுபோல சிறுத்தை வேட்டையாடுவதையும் சிறப்பாகச் சொல்லலாம். ஒரு மான் கூட்டம் இருந்தால் சிறுத்தை அந்தக் கூட்டத்தில் உள்ள ஒரே ஒரு மானைக் குறி வைக்கும். அதைத்தான் விரட்டும். அருகில் மிக அருகில் வேறு மான் இருந்தால் கூட அதை சட்டைசெய்யாது. தான் குறிவைத்த மானையே விரட்டிப் பிடிக்கும்.

அதுமட்டுமில்லாமல், சிறுத்தை தனக்குத் தேவையான உணவை தானே வேட்டையாடி உண்ணுமே தவிர, மற்ற மிருகங்கள் வேட்டையாடிய உணவை தொடவே தொடாது. ஒரு பெண் சிறுத்தை குறைந்தது 3 முதல் 5 குட்டிகள் வரை போடும். சிறுத்தைக் குட்டி பார்ப்பதற்கு சிங்கக்குட்டி போல அழகாக இருக்கும்.

முள்ளம்பன்றி

ஆப்பிரிக்காவில் கொறித்துத் தின்னும் பிராணிகளில் மிகப்பெரியது முள்ளம்பன்றிதான். இதன் முட்கள் உருண்டை வடிவாகவும் கடினமாகவும் 40 செ.மீ. நீளமுடையதாகவும் இருக்கும். எதிரிகள் வந்தால் உடம்பை சுருக்கி முட்களை விரிவடையச் செய்து ஒருவிதமான சத்தம் கொடுக்கும். முள்ளம்பன்றி இரவில்தான் வெளியே வந்து தன் உணவைத் தேடும். பகல் முழுக்க குழிகளில்தான் இருக்கும். முள்ளம்பன்றி ஆண்– பெண் என்று ஜோடியாகத்தான் வாழும். இது சுத்த சைவம். மொட்டு, வேர்கிழங்குகள், காய்கள், பழங்களைத்தான் உட்கொள்ளும்.